1986 ஏப்ரல் 28] [திரு. கு. ரமணி]

களைப் பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் இதேமாதிரி, திரு. சீனிவாசன் என்ற ஒரு வக்கீல், நில சம்பந்தமான கேஸிலே மாவட்ட ஆட்சித் தலைவரே வெளியிட்ட உத்தரவு அது. அந்த உத்தரவை எதிர்த்து ஹைகோர்ட்டிலே வந்து கேஸ் போட்டார்கள். கேஸ் போட்டதற்காக அந்தக் கோபத்தைப் பயன்படுத்திக்கொண்டு அந்த வக்கீல் வீட்டுக்குள்ளே போலீசார் புகுந்து அடிதடி நடத்தி அவரைக் கைது செய்து அவர் பேரில் கேஸ் போடப்பட்டிருக்கிறது. அதற்கு ஹைகோர்ட்டிலே கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் கோர்ட்டிலே நடந்து முடிந்திருக்கக்கூடிய விஷயங்கள். இதை எல்லாம் ஏன் நான் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன் என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வட்டாட்சியரும், கோட்டாட்சியரும் அதே மாதிரி பாராஸ்ட் டிப்பார்ட்மெண்டிலே இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களும் நமக்குத் தேவை. ஆனால் அவர்கள் மக்களுடைய உணர்வுக்கு நியாயம் வழங்கவேண்டும். அதை மீறி அவர்கள் நடக்கும்போது அதனைக் கண்டித்துத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும். கொடைக்கானலிலே நடக்கக்கூடிய விஷயத்தை நான் சொன்னால், இதைக்கூட ஸ்பீக்கரிடத்திலே கொடுக்கத் தயார். அதை வைத்துக்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் சொல்லவேண்டிய பல விஷயங்களைச் சொல்ல முடியாத நிலைமையிலே அது கைவிட்டுப் போனது என்று கூறி நான் உட்காருகிறேன்.

(பிற்பகல் 1-20)

6. அமைச்சரின் அறிக்கை.

உள்ளாட்சிகள் சட்டத்தைத் திருத்துவது குறித்து விதி 111-ன் கீழ் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 111-வது விதியின் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவைக்கு முக்கியமான அறிக்கை ஒன்றை தங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் தேர்தல்களில் தனது கட்சி உறுப்பினர் வெற்றி வாய்ப்பை இழப்பதாகத் தெரிந்தால், தேர்தல் முடிவினை அறிவிக்காமல் முறைகேடாக நடந்து கொண்டுள்ளதாக அரசுக்குத் தெரிய வந்துள்ளது. இவ்வித முறைகேடுகள் உறுப்பினர்களை ஒத்துத் தெரிவு செய்வதிலும் (கோவாப்ட் செய்வதிலும்) ஏற்படக்கூடும். இதனைத் தவிர்க்கும் பொருட்டு' 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தை பின்வருமாறு திருத்தி அமைக்க அரசு முடிவு செய்துள்ளது :

''துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கின்ற கூட்டங்கள் மற்றும் உறுப்பினர்களை ஒத்துத்தெரிவு செய்வதற்கான நோக்கத்திற்கான கூட்டங்கள் ஆகியவை, சம்பந்தப்பட்ட கோட்ட வளர்ச்சி அலுவலர்களால் கூட்டப்பட வேண்டும்.''

இந்தச் சட்டத் திருத்தம் விரைவில் கொண்டு வரப்பட உள்ளது. துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கும் மற்றும் உறுப்பினர்களை ஒத்துத்தெரிவு செய்து கொள்ளும் கூட்டங்கள் கூட்டப்பட்டிருப்பின் அவைகள் மேற்கூறிய சட்டத் திருத்தம் அமலுக்கு வரும் வரை ஒத்தி வைக்கப்பட வேண்டும். இதேபோல் மேற்கூறிய காரணங்களுக்காக இனிமேல் கூட்டப்படும் கூட்டங்களும் மேற்கூறிய சட்டத் திருத்தங்கள் அமல்படுத்தப்படும் வரை அவ்வாறே ஒத்தி வைக்கப்படும். இதற்கான உத்தரவுகள் தனியே இன்று பிறப்பிக்கப்பட உள்ளன.

4. வரவு—செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு—(*தொடர்ச்சி*):

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற மானியக் கோரிக்கைகளின்மீது நான் சார்ந்திருக்கின்ற காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைப் பேச விழைகிறேன்.

இன்று எனது தொகுதியைப் பொறுத்தவரையில் அங்குள்ள மக்கள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தித்தான் குடிநீராகவும், மற்ற வகையான உபயோகங்களுக்கும் உபயோகப்படுத்துகின்ற சூழ்நிலை இருந்து வருவதன் காரணமாக சாத்தான்குளம் தாலுக்காவை வறட்சி தாலுக்காவாக அறிவிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் பன்னம்பாடி என்னும் கிராமத்திற்கு பக்கத்திலே நிலம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் சில பள்ளத்தாக்குகள் இருந்து வருவதன் காரணமாக அங்கே ஒரு கசிவுநீர்க் குட்டையை